ந.க.எண் :073/2018/அ1

நாள். 19.04.2023

## திருவத்திபுரம் நகராட்சி
## குறுகிய கால மறு ஏல மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான , கீழ்க்காணும் விவரப்படி உள்ள குத்தகை இனங்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு வருகின்ற 27.04.2023 ந் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளரால் (அ) அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே அந்தந்த உரிமங்கள் பகல் 12.00 மணிக்கு பொது ஏலத்தில் விடப்படும்.

குத்தகை விவரம் :

| வ.எண் | குத்தகை விவரம் | ஏல பொறுப்பு தொகை ரூ | வட்டாட்சியரிடமிருந்து 01.01.2023 க்கு பிறகு பெற்ற சொத்து மதிப்பு சான்று ரூ | வட்டாட்சியரிடமிருந்து 01.01.2023 க்கு பிறகு பெற்ற சொத்து மதிப்பு சான்று பெறாதவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1) | திருவத்தூர் பகுதியில் (தற்காலிகமாக ) வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்தல் | 1,50,000 | 5,00,000 | 3,00,000 |
| 2) | மார்க்கெட் பகுதியில் ஆடு அறுக்கும் தொட்டியின் அருகில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | 25000 | 3,00,000 | 30000 |

### பொது நிபந்தனைகள் :

1) மேற்படி குத்தகை இனங்களுக்கு டெபாசிட் தொகையை 26.04.2023 ந் தேதி மாலை 3.00 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செலுத்தப்பட வேண்டும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்த வேண்டும்.
2) குத்தகை பொது நிபந்தனையின் படி , ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்தவுடன் குத்தகைதாரர் மூன்று தினங்களுக்குள் குத்தகைத்தொகை முழுவதும் செலுத்த வேண்டும். குத்தகை தொகை செலுத்த தவறும் பட்சத்தில் ஏலத்தை ரத்து செய்து மறு ஏலம் மறு ஒப்பந்தப்புள்ளி (அ) துறை மூலம் நடத்துவதாலோ ஏற்படும் பொருள் இழப்பிற்கு முதல் குத்தகைதாரரே பொருப்பாவார். அதன் படி1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 344 வது பிரிவின் படி முதல் குத்தகைதாரர் அல்லது அவரது வாரிசுகளிடமிருந்து வசூல் செய்யப்படும்.

3) 1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதிகள் இதற்கு பொருந்தும்.
4) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு செலுத்திய வைப்புத்தொகை குத்தகை உரிமம் உறுதி செய்யப்பட்ட பிறகு மூன்றாம் ஆண்டிற்கு வரவாக்கப்படும்.
5) குத்தகை உரிமக்காலம் ஓராண்டு காலமாகும். இரண்டாம் ஆண்டிற்கு குத்தகை தொடர முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும். மூன்றாம் ஆண்டிற்கு குத்தகை தொடர இரண்டாம் ஆண்டின் குத்தகைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும்.
6) எதிர்பாராமல் ஏற்படும் கலகம் , கொள்ளை நோய், வறட்சி, மறியல் , இயற்கை பேரிடர், பொதுவேலை நிறுத்தம் மற்றும் அரசு ஆணை போன்ற காரணங்களால் தற்காலிகமாக குத்தகையை நிறுத்தி வைக்க நேரிட்டால் அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு நகராட்சி பொறுப்பு ஏற்காது.
7) வைப்புத்தொகைக்கு வட்டி வழங்கப்பட மாட்டாது. மேலும் குத்தகை இடத்தினை சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும். மேலும் குத்தகை நிபந்தனைகளின் படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலித்துக்கொள்ள வேண்டியது. கூடுதலாக கட்டணம் வசூல் செய்யப்படுவது ஆணையரால் கண்டறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும்.
8) குத்தகைதாரர் மேற்கண்டுள்ள குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். மேலும். குத்தகைதாரர் ரூ 100.00 மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தப்பத்திரம் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## 1) வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்வதற்கான சிறப்பு நிபந்தனைகள்

1) குத்தகை உரிமக்காலம் ஓராண்டு காலமாகும். முதலாம் ஆண்டு முடிந்தவுடன் இரண்டாம் ஆண்டு குத்தகையை தொடர முதலாம் ஆண்டின் குத்தகைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும் மூன்றாம் ஆண்டு குத்தகையை தொடர இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும் குத்தகை தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்யப்படும்.
2) வாரச்சந்தை குத்தகைதாரர் பிரதிவாரம் ஞாயிற்றுகிழமைகளில் கூடும் சந்தையில் கட்டணம் வசூலித்துக்கொள்ள உரிமையுடையவர் ஆவார்.
3) சந்தை தினத்தை வேறு நாட்களில் மாற்றிக்கொள்ள குத்தகைதாரருக்கு உரிமை கிடையாது. விசேஷ சந்தை கூட்ட விரும்பினால் குத்தகைதாரர் ஆணையரின் எழுத்து மூலம் ஆணையை பெறவேண்டும். விசேஷ சந்தை தினங்களில் கூட சாதாரண விகிதப்படிதான் கட்டணம் வசூலிக்க வேண்டும்.
4) மழை காரணத்தினாலோ அல்லது வேறு ஏதேனும் இயற்கை இடர்ப்பாடுகளாலோ, எதிர்பாரா நிகழ்வுகளாலோ சந்தை நடைபெறாவிடில் அதற்கு நகராட்சி நஷ்டத்தை ஏற்காது.
5) நகரமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் இனங்களுக்கு அவைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்திற்கு மிகைப்படாமல் குத்தகைதாரர் கட்டணம் வசூலிக்க வேண்டும்.
6) வாரச்சந்தை கூடுமிடம் தவிர்த்து மற்ற இடங்களில் குத்தகைதாரர் குத்தகைத்தொகை வசூலிக்க உரிமை கிடையாது. மற்ற இடத்தில் வசூலிப்பதாக தெரியவந்தால் குத்தகைதாரர்களின் உரிமையை ரத்து செய்ய ஆணையருக்கு அதிகாரம் உண்டு.
7) வாரச்சந்தை நடத்த நகராட்சி ஒதுக்கீடு செய்யும் இடத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும். குத்தகைதாரர் மாற்று இடம் கோரவோ (அ)இழப்பீடு தொகை கோரவோ இயலாது.

| வ.எண் | கடைகளின் வகைப்பாடு | கட்டணத்தொகை ரூ |
|---|---|---|
| 1) | மண்பாண்டக் கடை | 25– |
| 2) | மீன் கருவாட்டுக்கடை | 100– |
| 3) | கூடை முறம் தொடப்பம் | 25– |
| 4) | பழக்கடை | 75– |
| 5) | வெற்றிலை புகையிலைக்கடை | 35– |
| 6) | ஜவுளிக்கடை | 50– |
| 7) | பொறிகடலை , பட்டாணி கடை | 35– |
| 8) | பூக்கடை | 50– |
| 9) | தின்பண்ட கடை | 25– |
| 10) | புளி கடை | 50– |
| 11) | அரிசி கடை | 35– |
| 12) | கேழ்வரகு நவதானியம் | 35– |
| 13) | கரும்பு கடை ஜீஸ் | 35– |
| 14) | வெங்காயம் , கிழங்கு கடை | 50– |
| 15) | சோடா கடை , சர்பத் | 35– |
| 16) | கறிவேப்பிலை கொத்தமல்லி , புதினா , கீரை வகைகள் | 25– |
| 17) | மளிகை கடை | 75– |
| 18) | காய்கறிகள் கடை | 75– |
| 19) | இரும்பு சாமான்கள் | 35– |
| 20) | விதை கடை | 35– |
| 21) | அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் | 50– |
| 22) | பானிபூரி | 25– |
| 23) | தேநீர் , காபி , சுக்கு காபி | 25– |
| 24) | கயிறு கடை | 25– |
| 25) | ரொட்டி , பிஸ்கட் கடை | 50– |

## 2. மார்க்கெட் பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பிடத்தில் சுங்கம் வசூலித்தல் சிறப்பு நிபந்தனைகள்

1) குத்தகை உரிமக்காலம் ஓராண்டு காலமாகும். முதலாம் ஆண்டு முடிந்தவுடன் இரண்டாம் ஆண்டு குத்தகையை தொடர முதலாம் ஆண்டின் குத்தகைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும் மூன்றாம் ஆண்டு குத்தகையை தொடர இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும் குத்தகை தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்யப்படும்.

2) குத்தகைதாரர் கீழ்கண்ட விவரப்படி கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

அ) நபர் 1–க்கு 1 தடவை குளிக்க ரூ. 5.00

ஆ) நபர் 1–க்கு 1 தடவை மலம் கழிக்க ரூ.2.00

இ) நபர் 1–க்கு 1 தடவை சிறுநீர் கழிக்க ரூ.1.00

3) குத்தகைதாரர் விளம்பரப் பலகையில் பொதுமக்கள் அறியும் வண்ணம் கட்டணங்களை தகவல் பலகையில் எழுதி வைக்கவேண்டும்.

4) கழிப்பிடத்தை தினமும் கிருமிநாசினி அடிக்கடி உபயோகித்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

5) மின்சாரக் கட்டணத்தை குத்தகைதாரரோ, மின்சார வாரியத்திற்கு நேரடியாகவோ தவறாமல் செலுத்த வேண்டும்.

6) மின்சாரக் கட்டணம் பொறுப்புத் தொகையை குத்தகை உரிமம் பெற்றவுடன் கூடுதலாக ரூ.500 செலுத்த வேண்டும்.

7) குத்தகைதாரர் எந்தவித காரணத்தாலும் அச்சிட்ட ரசீதுகளை கொடுக்காமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. அதற்குரிய எதிரேடுகள் (Counter Fail) குத்தகைதாரர் வைத்திருக்க வேண்டும்.

8) கழிப்பறையில் சிறுநீர் கழிக்கும் இடங்களை சுத்தம் செய்யத் தேவையான ஆட்களை குத்தகைதாரரே நியமனம் செய்துக் கொள்ள வேண்டும்.

9) குத்தகைதாரர் தன் சொந்த செலவில் கழிப்பிடத்தை பழுது பார்த்துக் கொள்ள வேண்டும்.

10) கழிப்பறையில் உள்ள மின் விளக்குகள் மற்றும் மின்சார பொருட்களை நல்ல முறையில் ஒப்படைக்க வேண்டும்.

ஆணையாளர்,
திருவத்திபுரம் நகராட்சி

19/4/2023

ந.க.எண் : 073/2018/அ1

பெறுநர் :
அனைத்து ஒப்பந்ததாரர்கள் (ம) குத்தகைதாரர்கள்
திருவத்திபுரம் நகராட்சி.

நகல் : வருவாய் ஆய்வாளர், திருவத்திபுரம் நகராட்சி.
நகல் : ஆணையாளர் மேசைக்கு.
நகல் :மேலாளர் மேசைக்கு.
நகல் : பொறியாளர் , பொதுப்பணி மேற்பார்வையாளர் , நகரமைப்பு ஆய்வர், துப்புரவு ஆய்வர் , திருவத்திபுரம் நகராட்சி.

நகல் : நகரமன்ற தலைவர், அவர்கள் மேசைக்கு,
நகல் : தகவல் பலகை மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் உள்ள பொது இடங்கள் / அரசு அலுவலக தகவல் பலகைகள்